## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-7 - செஞ்சொற் கவிகாள்[1]
**(தம் உடம்பில் எம்பெருமான் மிகுதியாக வைத்துள்ள விருப்பத்தை ஆழ்வார் அவனைக் கால்கட்டி விடுவித்துக் கொண்டு அவனது குணத்தைப் பாராட்டிப் பேசி அருளுதல்)**

3733 * செஞ்சொற் கவிகாள்! உயிர் காத்தாட் செய்ம்மின் * -
திருமாலிருஞ்சோலை *
வஞ்சக் கள்வன் மாமாயன் * மாயக் கவியாய் வந்து ** என்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து * நின்றார் அறியா வண்ணம் * என்
நெஞ்சும் உயிரும் அவை உண்டு * தானேயாகி நிறைந்தானே 1

3734 தானேயாகி நிறைந்து * எல்லா உலகும் உயிரும் தானேயாய் *
தானே யான் என்பானாகித் * தன்னைத் தானே துதித்து * எனக்குத்
தேனே பாலே கன்னலே அமுதே * திருமாலிருஞ்சோலை *
கோனேயாகி நின்றொழிந்தான் * என்னை முற்றும் உயிருண்டே 2

3735 என்னை முற்றும் உயிர் உண்டு * என் மாய ஆக்கை இதனுள் புக்கு *
என்னை முற்றும் தானேயாய் * நின்ற மாய அம்மான் சேர் **
தென்னன் திருமாலிருஞ்சோலைத் * திசை கை கூப்பிச் சேர்ந்த யான் *
இன்னும் போவேனே கொலோ? * என் கொல் அம்மான் திருவருளே? 3

3736 என் கொல் அம்மான் திருவருள்கள்? * உலகும் உயிரும் தானேயாய் *
நன்கென் உடலம் கைவிடான் * ஞாலத்தூடே நடந்துழக்கி **
தென்கொள் திசைக்குத் திலதமாய் நின்ற * திருமாலிருஞ்சோலை *
நங்கள் குன்றம் கைவிடான் * நண்ணா அசுரர் நலியவே[2] 4

3737 நண்ணா அசுரர் நலிவெய்த[3] * நல்ல அமரர் பொலிவெய்த *
எண்ணாதனகள் எண்ணும் * நன்முனிவர் இன்பம் தலைச் சிறப்ப **
பண்ணார் பாடல் இன்கவிகள் * யானாய்த் தன்னைத் தான் பாடி *
தென்னாவென்னும் என் அம்மான் * திருமாலிருஞ்சோலையானே 5

3738 திருமாலிருஞ்சோலையானே ஆகிச் * செழுமூவுலகும் * தன்
ஒரு மா வயிற்றின் உள்ளே வைத்து * ஊழி ஊழி தலை அளிக்கும் **
திருமால் என்னை ஆளுமால் * சிவனும் பிரமனும் காணாது *
அருமால் எய்தி அடி பரவ * அருளை ஈந்த அம்மானே 6

3739 அருளைஈ என் அம்மானே! என்னும் * முக்கண் அம்மானும் *
தெருள் கொள் பிரமன் அம்மானும் * தேவர் கோனும் தேவரும் **
இருள்கள் கடியும் முனிவரும் * ஏத்தும் அம்மான் திருமலை *

---
[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி
[2] நவியவே
[3] நவிவெய்த

மருள்கள் கடியும் மணிமலை * திருமாலிருஞ்சோலை மலையே 7

3740 * திருமாலிருஞ்சோலை மலையே * திருப்பாற்கடலே என்தலையே *
திருமால் வைகுந்தமே * தண் திருவேங்கடமே எனதுடலே **
அருமா மாயத்து எனதுயிரே * மனமே வாக்கே கருமமே *
ஒருமா நொடியும் பிரியான் * என் ஊழி முதல்வன் ஒருவனே 8

3741 ஊழி முதல்வன் ஒருவனே என்னும் * ஒருவன் உலகெல்லாம் *
ஊழி தோறும் தன் உள்ளே படைத்துக் * காத்துக் கெடுத்துழலும் **
ஆழி வண்ணன் என் அம்மான் * அந்தண் திருமாலிருஞ்சோலை *
வாழி மனமே கைவிடேல் * உடலும் உயிரும் மங்கவொட்டே 9

3742 மங்கவொட்டு உன் மாமாயை * திருமாலிருஞ்சோலை மேய *
நங்கள் கோனே! யானே நீயாகி * என்னை அளித்தானே! **
பொங்கைம்புலனும் பொறி ஐந்தும் * கருமேந்திரியம் ஐம்பூதம் *
இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி * மானாங்கார மனங்களே 10

3743 * மானாங்கார மனம் கெட * ஐவர் வன்கையர் மங்க *
தானாங்காரமாய்ப் புக்குத் * தானே தானே ஆனானை **
தேனாங்காரப் பொழில் குருகூர்ச் * சடகோபன் சொல் ஆயிரத்துள் *
மானாங்காரத்திவை பத்தும் * திருமாலிருஞ்சோலை மலைக்கே 11

**அடிவரவு:** செஞ்சொல் தானே என்னை என்கொல் நண்ணா திருமால்
அருளை திருமால் ஊழி மங்க மானாம் திருமால்